1994 ஜனவரி 3]

123--

எம். எஸ். பயின்ற மருத்துவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய பணிக்கப்படுதல்.

21272*–டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) எம். எஸ். பொது அறுவை சிகிச்சை பயின்ற மருத்துவர்கள் தனிப் பயிற்சி இல்லை என்கிற காரணம் கூறி குடும்ப கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்ய மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எம். எஸ். பொது அறுவை சிகிச்சை பயின்ற மருத்துவர்கள் தனிப் பயிற்சி இல்லை என்ற காரணம் கூறி குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய மறுப்பது பற்றிய புகார்கள் எங்கிருந்தும் கிடைக்கப் பெறவில்லை. குடும்ப கட்டுப்பாடு ஆண் அறுவை சிகிச்சை மற்றும் பெண் அறுவை சிகிச்சை செய்ய எம். எஸ். பொது அறுவை சிகிச்சை பயின்ற மருத்துவர்களுக்குத் தனி சிறப்புப் பயிற்சி தேவை இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம். எஸ். பொது அறுவை சிகிச்சை பயின்ற மருத்துவர்கள் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய தனிப் பயிற்சி மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மைதான். இருந்தாலும்கூட பொதுவாக எம். எஸ். பொது அறுவை சிகிச்சை பயின்றவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை என்பது மிகச் சிறிய அறுவை சிகிச்சைதான். இருந்தாலும்கூட இங்கே சில குறிப்பிட்ட மருத்துவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு, இந்த அவையிலே அதை எழுப்ப விரும்பவில்லை. பொது மக்களிடமிருந்து வந்த புகாரை வைத்துதான் இந்த வினா எழுப்பப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சை மருத்துவர்களைக் கேட்கிறபோது அவர்கள் வெளிப்படையாகவே சொன்னார்கள். நாங்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு என அரசு கொடுக்கிற தனிப் பயிற்சி பெறவில்லை என்று

சொன்னபோது நான் உண்மையிலேயே வருத்தப்பட்டேன். அவர்கள் அப்படிச் சொல்கிறபோது மேலும் சில காரணங்களைச் சொல்கிறார்கள். இதுபோன்ற தவறான செய்திகளைத் தருகிற அந்த அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பட்டியலை அரசுக்கு அனுப்பினால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு எம். எஸ். பயின்ற மருத்துவர் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கான பயிற்சி எனக்கு இல்லை, எனவே நான் அதைச் செய்ய முடியாது என்று தெரிவித்தால், மருத்துவராக, அதுவும் அறுவை சிகிச்சை மருத்துவராக இருக்க அவர் லாயக்கற்றவர் என்றுதான் இந்த அரசு கருதுகிறது. எனவே அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அந்தப் பட்டியலைக் கொடுத்தால், கடுமையான நடவடிக்கையை, இதிலே என்ன எக்ஸ்ட்ரீமாக முடியுமோ அந்த நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை சர்வீசிலேகூட விட்டுவைக்க இந்த அரசு தயாராக இல்லை. காரணம், குடும்ப கட்டுப்பாடு ப்ரோகிராம் என்பது தேசியப் பிரச்சினை. இதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டி, கடந்த சில ஆண்டுக்காலமாக முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறோம். இதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலே இதற்குப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர்கள் யாராவது தவறான காரணங்கள் சொல்வார்கள் என்றால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று அறுவை சிகிச்சை செய்கிறேபோது ரொட்டேஷன் முறையில் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் அறுவை சிகிச்சை மருத்துவர் விடுப்பிலே சென்றிருந்தால், அங்கே அறுவை சிகிச்சைக்குக் காத்துக் கொண்டிருக்கும் நோயாளிகள் அறுவை சிகிச்சை செய்துகொள்ளத் தயாராக இருந்தாலும், அங்கே இருக்கும் எம்.எஸ். பட்டதாரிகள் ஏதோ ஒரு காரணம் சொல்லுகிறார்கள். இது ஒரு சிறிய ப்ரோசீஜர்தான். அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும்கூட, ஏதாவது காரணம் சொல்லி தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல, மேலும் சில காரணங்கள் சொல்லுகிறார்கள். தாலுக்கா மருத்துவமனையில் தேவையான அனெஸ்தசிஸ்ட்ஸ் இல்லை என்று சாக்கு சொல்லுகிறார்கள். விசாரிக்கிறபோது, அங்கே அனெஸ்தசிஸ்ட்ஸ் இல்லை. அனெஸ்தசிஸ்ட் இல்லாத காரணத்தால் பொது அறுவை சிகிச்சை செய்ய முடியாத நிலைமை உருவாகிறது.

1994 ஜனவரி 3]

முற்பகல் 10.10

ஆகவே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, இதுபோல எந்தெந்த தாலுக்கா மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்வதற்காக மயக்க மருத்துவர்கள் இல்லையோ, அத்தகைய மருத்துவ மனைகளில் அந்த அனெஸ்தசிஸ்டுகளை நியமிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம். எஸ். படித்தவர்கள் இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு மறுப்பது சில இடங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கலாம். பெரும்பாலான இடங்களில் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்கின்ற காரணத்தால்தான் இந்தத் திட்டத்திலே நாம் முன்னணியில் இருக்கமுடிகிறது. இருந்துகொண்டும் இருக்கிறோம். குறிப்பாக அனெஸ்தசிஸ்டுகளைப் பொறுத்தவரையில், தேவையான அளவுக்கு ஏற்கெனவே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அடிப்படையிலிருந்து கவனிக்கும்போது, நமக்கு அடிப்படையில் சில பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக இத்தகைய சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக இன்றைக்கு அரசு மருத்துவர்கள் பத்தாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இந்தப் பத்தாயிரம் பேர்களும், தேவைக்கேற்ப நியமிக்கப்படவில்லை. எம்.பி., பி.எஸ். படித்தவர்கள் என்று எடுத்துவிட்டார்கள். அதற்குப் பின்னாலே, அவரவர்கள் விருப்பம் போல என்ன என்ன பட்டத்தைப் பெறவேண்டுமோ அந்தப் பட்டங்களைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக, நமக்கு எம். எஸ். படித்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அனெஸ்தசிஸ்டுகள் போதவில்லை. அதேபோல ஆர்த்தோ–வுக்குப் படித்தவர்களும் போதவில்லை. இப்படி சில ஸ்பெஷலிஸ்டுகள் போதாத நிலை இருக்கிறது. இதை ஈடுகட்ட வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இனிமேல் வருகிற காலியிடங்களை ஸ்பெஷாலிட்டி அடிப்படையில் நிரப்பவேண்டுமென்று முடிவெடுத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படி எடுக்கிறபோது பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இப்போது அனெஸ்தசிஸ்டுகள் தேவை என்று சொன்னால், உடனடியாக அப்படி எடுப்பதற்கும் வாய்ப்பு இல்லை. வருகின்ற காலி இடங்களை வைத்துத்தான் நாம் நிரப்ப முடியும். அது மட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அதற்காக டி.ஏ. படித்தவர்கள், எம்.டி. படித்தவர்கள் போன்றவர்களை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்காமல், அவர்களுக்குத் தனியாக ஒரு பயிற்சியைக் கொடுத்து, அந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் மூலமாக இப்போதே நாம் செய்கிறோம். இருந்தாலும்

இதை முழுமையாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. தற்காலிகமாக இது செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே இந்தப் பிரச்சினை தீர்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி மருத்துவர்களுக்கு தனிப் பயிற்சியாக என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? அட்மினிஸ்டிரேஷன் போன்றவற்றுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றனவா? அப்படி அளிக்கப்படும் பயிற்சியால் மருத்துவர்கள் பயன் பெறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு அட்மினிஸ்டிரேஷன் லைனில் அதிக ஆர்வம் இருப்பதில்லை. அப்படி வந்தாலும்கூட, அதில் அவர்களுக்கு ஏற்கனவே அனுபவம் இல்லாத காரணத்தால், சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அரசு உணர்ந்து, அதற்காக இப்போது அட்மினிஸ்டிரேடிவ் டிரெய்னிங் என்ற பயிற்சியைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பதவிக்கு வருகிறபோதே, அப்படி கொடுக்கமுடியும் என்று சொன்னால், கொடுக்கிறோம், அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது ரொட்டேஷன் முறையில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதன் மூலமாக ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் உடனடியாக எந்தப் பயனும் நமக்குக் கிடைத்துவிடாது. காரணம் இப்போது புதிதாக வரக்கூடியவர்கள், அட்மினிஸ்டிரேடிவ் லைனுக்கு வருவதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கும். இது எதிர்காலத்தில் பயன்படும் என்ற வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அரசு மருத்துவ மனைகளில் மயக்க மருந்து டாக்டர்கள் குறைவாக இருப்பது உண்மைதான். அந்த நிலையைப் போக்கவும், குடும்பக் கட்டுப்பாடு போன்ற அறுவை சிகிச்சைகள் செய்வதற்கும், பொது அறுவை சிகிச்சை செய்வதற்கும், இந்த அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு மூன்று மாதத்திற்கு அனெஸ்தடிஸ்டிக் கோர்சை ஸ்பெஷல் டிரெய்னிங்–ஆகக் கொடுத்து அதில் ஒரு சர்டிபிகேட்டை வழங்கினால், அவர்கள் Competent Surgeons - ஆக இப்படிப்பட்ட

1994 ஜனவரி 3]

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை போன்றவற்றை செய்வதற்குத் தகுதியுடையவர்களாக ஆவார்கள். அதற்கேற்றப்படி ஒரு ஆணையை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று மாத அனெஸ்தடிஸ்ட் பயிற்சிக்காகக் கொடுப்பது என்பது, எம்.எஸ். படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பது அல்ல. எந்த மருத்துவர்கள் வேண்டுமென்றாலும் விருப்பப்பட்டால் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். அந்த வகையிலேதான் இப்போது கொடுத்து, இருக்கின்ற நிலைமையை நாம் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் முறையாகப் படித்த அனெஸ்தடிஸ்டுகள் அந்த வேலையில் அமர்த்தப்படுவார்கள். இப்போது நிலைமையைச் சமாளிப்பதற்காக அந்த டிரெய்னிங் பெற்றவர்களை நாம் நியமித்துக் கொண்டிருக்கிறோம். அந்த டிரெய்னிங் தொடர்ந்து நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

124--

தனியாருக்குப் புதிய வழித்தட உரிமங்களை வழங்குதல்.

**10190–திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு பேருந்து போதுமான அளவு இல்லாத காரணத்தால் புதிய வழித்தட உரிமங்கள் தனியாருக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளை சிறு சிறு கிராமங்களுக்குப் புதிய வழித் தடங்களில் விடுகின்றபோது, கலெக்ஷன் ஆகவில்லை என அவைகள் நிறுத்தப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட குக்கிராமங்களை இணைத்துச் செல்லும் பேருந்துகளால் அரசுக்கு